# Solar Homes திட்டம் குறித்த தகவல் அறிக்கை



## Solar Homes திட்டம்

விக்டோரியன்கள் எரிசக்தி பில்களை தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டு, வேலைகளை உருவாக்குகிறார்கள், பருவநிலை மாற்றத்தை சமாளிக்கிறார்கள் மற்றும் Solar Homes திட்டத்தின்மூலம் அனைத்து விக்டோரியன்களுக்கும் தூய்மையான, சிறந்த எதிர்காலத்தை வழங்குகிறார்கள்.

## ஏன் சூரிய சக்தி அமைப்பை நிறுவ வேண்டும்?

- உங்கள் மின்சார பில்களைக் குறைக்கும்
- உங்கள் மின்சார விநியோகத்தை அதிகரிக்கும்
- 5,500 சோலார் தொழில்துறை வேலைகளை உருவாக்க உதவலாம்
- பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளலாம்

## இந்தத் திட்டத்தைப் பற்றிய ஓர் அறிமுகம்

Solar Homes திட்டம் தகுதிவாய்ந்த விக்டோரிய குடும்பங்களுக்கு அவர்களின் மின் கட்டணங்களுக்கு பொறுப்பேற்கவும், புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு மாறவும் மற்றும் அனைத்து விக்டோரியன்களுக்கும் தூய்மையான, சிறந்த எதிர்காலத்தை வழங்கவும் உதவுகிறது.

சோலார் பேனல்கள் (பி.வி), சோலார் ஹாட் வாட்டர் மற்றும் சோலார் பேட்டரிகளுக்கான தள்ளுபடியுடன் சோலாரைப் பெறுவதையும், சோலார் பேனல்களுக்கான வட்டி இல்லாத கடன்கள் (பி.வி) உள்ளிட்ட புதிய சலுகைகளைப் பெறுவதையும் இந்தத் திட்டம் எளிதாக்குகிறது.

உங்கள் சோலார் சில்லறை விற்பனையாளர் உங்கள் சார்பாக தள்ளுபடியைக் கோருவார், மேலும் தள்ளுபடி தொகை உங்கள் ஒட்டுமொத்த அமைப்பு மற்றும் நிறுவலின் விலையிலிருந்து கழிக்கப்படும். நிறுவப்பட்டதும் நிலுவைத் தொகையை உங்கள் சோலார் சில்லறை விற்பனையாளருக்கு நேரடியாகச் செலுத்துவதற்கு நீங்கள்தான் பொறுப்பு.

### ஒரு வட்டியில்லா-கடனை சேர்க்க வேண்டுமா?

செலவுகளை மேலும் குறைக்க, உரிமையாளர்-குடியிருப்பவர்கள் **சோலார் பேனல் (பி.வி) அமைப்புகளுக்காக,** அவற்றின் சோலார் பேனல் (பி.வி) தள்ளுபடி தொகைக்கு சமமான தொகைக்கு வட்டி இல்லாத கடனுக்காக விண்ணப்பிக்கலாம். தள்ளுபடி விண்ணப்ப செயல்முறையின் ஒரு பகுதியாக கடனுக்கான உங்கள் தகுதி குறித்து சோலார் விக்டோரியா போர்ட்டல் வழியாக உங்களுக்கு அறிவிக்கப்படும்.

புதிய விண்ணப்ப செயல்முறையின் கீழ், தள்ளுபடி மற்றும் கடன் தொகைகள் உங்கள் அமைப்பின் விலையிலிருந்து கழிக்கப்படும் - அமைப்பு நிறுவப்பட்டதும் நிலுவையில் உள்ள தொகையை மட்டுமே நீங்கள் செலுத்த வேண்டும் என்பதை இது உறுதிசெய்கிறது. உங்கள் சோலார் சில்லறை விற்பனையாளருக்கு தள்ளுபடி மற்றும் கடன் தொகைகள் திருப்பிச் செலுத்தப்படும்.

கடனை நான்கு ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். **சோலார் வாட்டர் ஹீட்டர் அல்லது சோலார் பேட்டரிகளுக்கு கடன்கள் கிடைக்காது.**

## கிடைக்கும் தள்ளுபடிகள்

### சோலார் பேனல்கள் (பி.வி) தள்ளுபடி

வாடகை சொத்து உரிமையாளர்கள் உட்பட தகுதியான குடும்பங்கள் சோலார் பேனல்களின் (பி.வி) விலையில் தள்ளுபடி கோரலாம்.

### வாடகை சொத்துக்களுக்கு சோலார் பேனல் (பிவி) தள்ளுபடி

தகுதியான வாடகை சொத்து உரிமையாளர்கள் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் நன்மைகளை, குடியிருப்பவர்கள் அணுகுவதற்காக அவர்களுக்கு வழங்கும் சோலார் பேனல்களுக்கான (பி.வி) விலையில் தள்ளுபடியைக் கோரலாம்.

### சோலார் ஹாட் வாட்டர் அமைப்பிற்கான தள்ளுபடி

தகுதியான குடும்பங்கள் சோலார் ஹாட் வாட்டர் அமைப்பின் விலையில் தள்ளுபடி கோரலாம்.

### சோலார் பேட்டரி தள்ளுபடி

தகுதியான குடும்பங்கள் சோலார் பேட்டரியின் விலையில் தள்ளுபடி கோரலாம்

பேட்டரிக்கான ஆரம்பத் தள்ளுபடியானது, ஏற்கனவே சோலார் பேனல்கள் வைத்திருந்து ஆனால் சோலார் தள்ளுபடியைப் பெறாதிருக்கும் விக்டோரியாவில் உள்ள குறிப்பிட்ட போஸ்டல் குறியீடுகளை மட்டும் இலக்கு வைத்துள்ளது.

Solar Victoria

VICTORIA State Government

# நீங்கள் துவங்குவதற்கு முன்: திட்டத்தின் தகுதியைப் புரிந்து கொள்ளுங்கள்.

| **விக்டோரியன்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் தள்ளுபடியைப் பெற தகுதியுடையவர்கள்:** | சோலார் பேனல்கள் (பி.வி) தள்ளுபடி | வாடகை சொத்துக்களுக்கு சோலார் பேனல்(பிவி) தள்ளுபடி | சோலார் ஹாட் வாட்டர் தள்ளுபடி | சோலார் பேட்டரி தள்ளுபடி |
|---|---|---|---|---|
| விண்ணப்பதாரர், அமைப்பு நிறுவப்படும் சொத்தின் உரிமையாளர்-குடியிருப்பவராக இருக்க வேண்டும் | ✓ | | ✓ | ✓ |
| அனைத்து உரிமையாளர்களின் ஒருங்கிணைந்த வரிக்குட்பட்ட வீட்டு வருமானம் ஆண்டுக்கு, $180,000 க்கும் குறைவாக இருக்க வேண்டும் (உங்கள் ஆஸ்திரேலிய வரி அலுவலக மதிப்பீட்டு அறிவிப்பின் அடிப்படையில்) | ✓ | | ✓ | ✓ |
| இது ஏற்கனவே உள்ள சொத்து, இதன் மதிப்பு $3 மில்லியனுக்கும் குறைவானது | ✓ | ✓ | ✓ | ✓ |
| சொத்தில் ஏற்கனவே சோலார்பி.வி அமைப்பு எதுவும் இல்லை (1 நவம்பர் 2009 முதல்) | ✓ | ✓ | | |
| விண்ணப்பதாரர் ஏற்கனவே Solar Homes திட்டத்தின் கீழ் உரிமையாளர்-குடியிருப்பாளராக தள்ளுபடியைக் கோரவில்லை | ✓ | | ✓ | ✓ |
| நில உரிமையாளருக்கும் குத்தகைதாரருக்கும் இடையிலான ஒரு Solar Homes திட்டஒப்பந்தத்தில் நில உரிமையாளர் மற்றும் அனைத்து குத்தகைதாரர்(கள்) கையெழுத்திட வேண்டும் | | ✓ | | |
| அனைத்து குத்தகைதாரர்களின் ஒருங்கிணைந்த வரிக்குட்பட்ட வீட்டு வருமானம், ஆண்டுக்கு, $180,000 க்கும் குறைவாக இருக்க வேண்டும் (உங்கள் ஆஸ்திரேலிய வரி அலுவலக மதிப்பீட்டு அறிவிப்பின் அடிப்படையில்) | | ✓ | | |
| ஹாட் வாட்டர் அமைப்பு மாற்றப்பட வேண்டுமென்றால் அது வாங்கிய நாளிலிருந்து குறைந்தது மூன்று ஆண்டுகள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் | | | ✓ | |
| சொத்து புதிதாகக் கட்டப்பட்டதல்ல | | | ✓ | |
| இந்தச் சொத்து ஒரு குறிப்பிடப்பட்ட அஞ்சல் குறியீட்டிற்குள் உள்ளது மற்றும் ஏற்கனவே 5 கிலோவாட் அல்லது அதற்கு மேற்பட்ட திறன் கொண்ட சூரிய பி.வி பேனல்களைக் கொண்டுள்ளது | | | | ✓ |
| உங்கள் டிஸ்ட்ரிபியூட்டட் நெட்வொர்க் சர்வீஸ் புரொவைடர் (டி.என்.எஸ்.பி) இடமிருந்து முன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது | | | | ✓ |
| சேமிப்பக தீர்வு எங்கள் அங்கீகரிக்கப்பட்ட பேட்டரி பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ளது மற்றும் சொத்தில் ஏற்கனவே எந்தவித ஆற்றல் சேமிப்பு அமைப்பும் பயன்படுத்தப்படவில்லை | | | | ✓ |
| உரிமையாளர்/கள் கீழ்க்கண்டவற்றைப் பெற ஒப்புக்கொள்கிறார்கள்:<br>• அவர்களின் டிஸ்ட்ரிபியூஷன் நெட்வொர்க் சர்வீஸ் புரொவைடரிடமிருந்து தகவல்<br>• தேர்ந்தெடுக்கப்பட்டால் இலவச பாதுகாப்பு ஆய்வு மற்றும் / அல்லது தணிக்கை. | | | | ✓ |

**ஒவ்வொரு தள்ளுபடி திட்டத்துக்கும் அதன் தனித்துவமான தகுதித் தேவைகள் மற்றும் விண்ணப்ப செயல்முறை உள்ளது. நீங்கள் விண்ணப்ப செயல்முறையைத் தொடங்குவதற்கு முன் solar.vic.gov.au என்ற தளத்தில் விவரங்களைத் தெரிந்து கொள்ளவும்.** உங்கள் சொத்து, தகுதிக்கான அளவுகோல்களுடன் பொருந்துகிறது என்று உறுதியாகத் தெரிந்ததும், எந்த சோலார் வல்லுநர்கள் மற்றும் தயாரிப்புகள் திட்டத்தில் பங்கேற்க அங்கீகாரம் பெற்றுள்ளன மற்றும் எவை உங்கள் ஆற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்பதை நீங்கள் ஆராய்ச்சி செய்யத் தொடங்கலாம்.

## எங்களைத் தொடர்பு கொள்ளவும்

www.solar.vic.gov.au இல் நீங்கள் திட்டத்தைப் பற்றிய கூடுதல் தகவல்களைக் காணலாம் அல்லது எங்கள் வாடிக்கையாளர் சேவை குழுவை 1300 376 393 (வணிக நேரங்களில்) என்ற எண்ணில் அழைக்கலாம்.

Interpreter

**நேஷனல் ட்ரான்ஸ்லேட்டிங் அண்ட் இண்டர்பிரட்டிங் சர்வீஸ்: 131 450.**

© தி ஸ்டேட் ஆஃப் விக்டோரியா டிபார்ட்மெண்ட் ஆஃப் என்விராண்ட்மெண்ட், லேண்ட், வாட்டர் & பிளான்னிங் 2019

**பொறுப்புதுறப்பு**

இந்த வெளியீடு உங்களுக்கு உதவியாக இருக்கலாம், ஆனால் விக்டோரியா மாநிலமும் அதன் ஊழியர்களும், இந்த வெளியீடு எந்தவிதமான குறைபாடும் இல்லாமல் இருப்பதற்கு அல்லது உங்கள் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக முற்றிலும் பொருத்தமானது என்பதற்கு உத்தரவாதம் அளிக்கவில்லை, எனவே இந்த வெளியீட்டில் உள்ள எந்தத் தகவலையும் நம்பி உங்களிடமிருந்து எழக்கூடிய எந்தவொரு பிழை, இழப்பு அல்லது பிற விளைவுகளுக்கான அனைத்து பொறுப்புகளையும் மறுக்கிறது.